# M.Varatharasanar – மு.வரதராசனார்

மு.வ எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட மு. வரதராசன் (ஏப்ரல் 25, 1912 - அக்டோபர் 10, 1974) 20ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர். இலக்கியக் கட்டுரைகள் , ஆராய்ச்சி நூல்கள் போன்றவை மட்டுமின்றிப் பல சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரி, சென்னைைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைமைப் பொறுப்பில் இருந்ததுடன் , மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றினார். பன்முக ஆற்றல்கள் கொண்ட இவர் நல்லாசிரியராகவும் , பண்பாளராகவும் விளங்கினார்.

## வாழ்க்கைச் சுருக்கம்

மு.வரதராசனார், அன்றைய வட ஆற்காடு மாவட்டம் , திருப்பத்தூரில் முனுசாமி - அம்மாக்கண்ணு தம்பதிக்குப் பிறந்தார். திருவேங்கடம் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டாலும் தாத்தாவின் பெயரான வரதராசன் என்ற பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது.

மு.வ. வின் கல்வி ,வேலூர் மாவட்டம் , வாலாஜாப்பேட்டை அருகிலுள்ள வேலம் என்னும் சிறிய கிராமத்துடன் இயைந்து வளர்ந்தது. உயர்நிலைக் கல்வியைத் திருப்பத்தூரில் கற்றுத் தேர்ந்தார். பதினாறு வயதில் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். 1928-ஆம் ஆண்டில் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சில காலம் எழுத்தராகப் பணியாற்றினார்.

எழுத்தராகப் பணியாற்றிய போது உடல் நலம் குன்றியதால் அந்தப் பணியிலிருந்து விடுபட்டு ஓய்வுக்காகக் கிராமத்துக்குச் சென்று , அங்கு திருப்பத்தூர் முருகைய முதலியார் என்பவரிடம் தமிழ் கற்கத் தொடங்கினார்.


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

1931-இல் வித்வான் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் தாமே பயின்று 1935-இல் வித்வான் தேர்வு எழுதி , அதில் மாநிலத்திலேயே முதல் மாணாக்கராகத் தேர்ச்சி பெற்றார்.

1935-ஆம் ஆண்டு தம் மாமன் மகளான ராதா அம்மையாரை மணந்தார். இவர்களுக்குத் திருநாவுக்கரசு, நம்பி, பாரி ஆகிய ஆண் மக்கள் பிறந்தனர். 1935 முதல் 1938 வரை திருப்பத்தூர் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939-இல் பி.ஓ.எல். தேர்ச்சி பெற்றார்.

## விருதுகள்

மு.வ.வின் அகல் விளக்கு எனும் புதினத்திற்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது. கள்ளோ காவியமோ, அரசியல் அலைகள், மொழியியல் கட்டுரைகள் ஆகிய மூன்று நூல்களுக்குத் தமிழக அரசின் விருது கிடைத்தது. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் , மொழிநூல், கள்ளோ காவியமோ. அரசியல் அலைகள், விடுதலையா, ஓவச் செய்தி ஆகிய ஆறு நூல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரங்களைப் பெற்றன. பல நூல்கள் , ஆங்கிலம், இந்தி, மராத்தி, ரஷ்ய மொழி , சிங்கள மொழி , தெலுங்கு மலையாளம் , கன்னடம் போன்ற பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கவிஞர் | மு.வரதராசனார் (மு.வ) |
| பெற்றோர் | முனுசாமி முதலியார் – அம்மாக்கண்ணு |
| பிறப்பு | வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் |
| காலம் | 1912-1974 (20ஆம் நூற்றாண்டு) |
| விருதுகள் | • அகல் விளக்கு – சாகித்ய அகாதெமி விருது<br>• கள்ளோ காவியமோ , அரசியல் அலைகள் , மொழியியல் கட்டுரைகள் – தமிழக அரசின் விருதுகள் |

- மு.வரதராசனார் 20-ம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர்.



அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- 1944-இல் "தமிழ் வினைச் சொற்களின் தோற்றமும் " என்ற தலைப்பில் ஆராய்ந்து எம்.ஓ.எல். பட்டம் பெற்றார்.
- 1948-ல் "சங்க இலக்கியத்தில் இயற்கை " என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்தற்காக சென்னை பல்கலைக்கழகம் முனைவர் பட்ட்டம் அளித்தது. சென்னை பல்கலைக்கழகம் மூலம் முதன் முதலாக தமிழில் டாக்டர் பெற்ற பெருமைக்குரியவர்.
- அவர் நாவல்கள் , சிறுகதைகள், சிறுவர் இலக்கியம் , நாடகங்கள், இலக்கணம், கட்டுரைகள், தமிழ் இலக்கிய நூல்கள் , பயணக்கட்டுரை, முன்னுரைகள், மொழிபெயர்ப்பு, மேற்கொள்கள் என 91 நூல்களை தமிழுக்கு தந்துள்ளார்.
- இனிமை, எளிமை, கருத்தாழம் இவரது சிறுகதைப் பண்புகள் ஆகும்,
- விடுதலையா? குறட்டை ஒலி , கி.பி. 2000, பழியும் பாவமும் ஆகியவை மு.வ.வின் சிறுகதைகள் ஆகும்.
- இவரது நூல்கள் ஆங்கிலம் , இந்தி, மராத்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in